உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரித்தல்.

* 358—திரு. கே. சுந்தர்: மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியம் இரண்டாகப் பிரிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பிரிக்கப்படும்?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ). இப்பொருள் ஊரக வளர்ச்சி ஆணையரின் ஆய்விலுள்ளது.

திரு .கே. சுந்தர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே தமிழ்நாட்டிலே மிகப்பெரிய ஒன்றியமாக 73 ஊராட்சிகளையும் ஒரு பேரூராட்சியையும் அடங்கிய ஒன்றியம் உத்திரமேரூர். அந்த ஒன்றியம் இரண்டாகப் பிரிக்கப்பட வேண்டும் என்று அந்த பகுதி மக்கள் 20 ஆண்டுகளாக முயற்சிக்கின்றார்கள். எனவே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆய்வில் உள்ளது என்று சொல்லி இருக்கின்றார்கள். மிகப் பெரிய ஒன்றியமாக உள்ள அதை இரண்டாகப் பிரிப்பதற்கு ஆவன செய்வார்களா என்று கேட்டுக் கொள்கிறேன்.

9–35 மணி

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மிகப் பெரிய ஊராட்சி ஒன்றியம் என்பதை ஒத்துக்கொள்கிறேன். ஆனால் அந்த ஒன்றியத்தை இரண்டாகப் பிரிப்பதற்காக முயன்றபோது, அதிலே சாலைவாக்கத்தை தலைமையாகக் கொண்டு வரும்போது, வாக்காளர் எண்ணிக்கையும், மக்கள் எண்ணிக்கையும் குறைவாக இருந்தது என்று திருப்பி மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பப்பட்டது. அதற்குப் பிறகும் அதே போலத்தான் வந்து கொண்டிருக்கிறது. அதைப் பற்றி பரிசீலித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் உடனடியாக அமைக்க வேண்டும் என்பது முடியாது. காரணம் மத்திய அரசிடமிருந்து ஒரு தடை இருக்கிறது. அதை நீக்குவதற்கு போதுமான காரணம் இல்லை. இருந்தாலும் விரைவாக பரிசீலித்து நடவடிக்கை உடனடியாக எடுக்கப்படும்.

திரு. எஸ். டி, உகம்சந்த்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த உத்திரமேரூர் மற்றும் மதுராந்தகம் ஆகிய இரண்டு ஒன்றியங்களையும் சேர்த்து மூன்று ஒன்றியங்களாகப் பிரிப்பதற்கு ஏற்கெனவே அரசினுடைய குறிப்புகள் தயார் செய்யப்பட்டிருக்கிறது. ஆனாலும் 1982 ஆம் ஆண்டு முதற்கொண்டு, பெரிய ஊராட்சி

1990 மார்ச் 19]

ஒன்றியங்களைப் பிரிக்கக்கூடாது என்ற தடை உத்தரவு அரசிடமிருந்து இருக்கிறது. அந்தத் தடையை நீக்க அரசு முன் வருமா? அத்தோடு இன்றைக்கு மக்கள் தொகை கணக்கு எடுப்புத் தடை என்ற வகையிலே ஒரு தடை இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அத்தோடு நம்முடைய அரசினுடைய தடையும் இருக்கிறது. அதை நீக்குவதற்கு அரசு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன். அத்தோடு. . . . . . . (மணியடிக்கப்பட்டது)

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது போன்று பல முறை முயற்சித்தும் மத்தியில் இருக்கிற ஆட்சி மக்கள் தொகை கணக்கு எடுப்பு முக்கியம் என்பதை மனத்தில் கொண்டு, அந்தத் தடையை தளர்த்துவதற்கு இல்லை என்று கூறியிருக்கிறார்கள்.

திரு. கோ. வீரையன்: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றியத்தை இரண்டாகப் பிரிக்கக்கூடிய செயற்குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் இருப்பதாகத் தெரிவித்தார்கள். அப்படி தமிழகத்தில் எத்தனை ஊராட்சி ஒன்றியங்களைப் பிரிப்பதற்கான செயற்குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் உள்ளது. நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியமும் அப்படி பரிசீலனையில் உள்ளதா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனி வினா எழுப்பவும்.

திரு. அ. மாரிமுத்து: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் உள்ள பெரிய ஒன்றியங்களில் தென் ஆற்காடு மாவட்டம் வானூர் தொகுதியில் உள்ள வானூர் ஒன்றியமும் ஒன்று. அறுபத்தியேழு. . . . . (மணியடிக்கப்பட்டது).

பெரியகுளம் நகரில் புதிதாகப் பேருந்து நிலையம் கட்டுதல்.

*3549—திரு. எல். மூக்கையா: மாண்புமிகு ஊரக மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) பெரியகுளம் நகரில் புதிதாக பேருந்து நிலையம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அப்பணி எப்பொழுது ஆரம்பமாகும்?

மாண்புமிகு திரு. கோ. சி. மணி: பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) பொதுப்பணித் துறையால் விவர மதிப்பீடுகள் தயாரித்து. தொழில் நுட்ப அனுமதி வழங்கி ஒப்பந்தம் முடிவு செய்தபின் இப்பணி தொடங்கும்.